Clauses 2, 3 and 4 were put and carried.

Clause 1 and the Preamble were put and carried.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move—

'That the Madras Wakf (Supplementary) Bill, 1961 (L.A. Bill No. 10 of 1961) be passed.'

DEPUTY SPEAKER : The question is—

'That the Madras Wakf (Supplementary) Bill, 1961 (L.A. Bill No. 10 of 1961) be passed.'

The motion was put and carried and the Bill was passed.

(8) THE MADRAS IRRIGATION CESS (AMENDMENT) BILL, 1961 (L.A. BILL NO. 17 OF 1961)—DISCUSSION—cont.

DEPUTY SPEAKER : Now the discussion on the Madras Irrigation Cess (Amendment) Bill, 1961, will be continued.

SRI A. R. MARIMUTHU : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த இர்ரிகேஷன் செஸ் மசோதா இந்த சபையிலே நன்கு ஆலோசிக்காத முறையில் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்றுதான் நான் கருதுகிறேன். இப்போது சில புது திட்டப் பகுதிகளிலே இது அமுலில் இருக்கிறது. ஆகவே இதர இடங்களிலும் அமுலாக்க வேண்டுமென்ற கருத்துடன்தான் இப்போது இது இங்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது. இது அமுலிலே இருக்கிற பகுதிகளில் என்னென்ன நலன்கள் கிடைத்திருக்கிறது என்பதைத் திட்டவட்டமாக அறிந்த பின்னர், இதை இதர இடங்களுக்கும் மேலும் பலன் கிடைக்குமென்று இந்தச் சட்டத்தை இந்த அரசாங்கம் கொண்டு வருவதற்கு உத்தேசித்து, அந்த முறையிலே கொண்டு வரப்பட்டிருக்கிறதா என்பதையும் அறிந்து கொள்ள வேண்டும். அப்படியெல்லாம் இல்லாமல் ஒரு பகுதியிலே இருக்கிறது, இதை மற்றப் பகுதிகளுக்கும் விஸ்தரிக்க வேண்டுமென்று கொண்டு வருவதானது தவறாகும் என்பதை இந்தச் சமயத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இப்போது மேட்டூர் பாசனப் பகுதியை எடுத்துக் கொண்டால், அங்கே கடந்த 25 ஆண்டுகளாக பாசன வசதி செய்யப்பட்டு இருக்கிறது. இன்னும் பல இடங்களில் தண்ணீர் வாய்க்கால் மூலமோ, அல்லது வேறு வகைகளிலோ சரியாகப் பாயாத நிலை இருக்கிறது. பல கோரிக்கைகள் இப்போது அந்தந்தப் பகுதிகளிலிருந்தும், மாவட்டங்களிலிருந்தும் வந்து அவைகள் எல்லாம் பரிசீலனை செய்யப்பட்டு, வேறு இடங்களுக்கு இவைகளை எப்படி மாற்ற வேண்டும், எங்கு பாசன வசதி கம்மியாக இருக்கிறது, எங்கெங்கெல்லாம் தரிசு நிலங்கள் அதிகமாக இருக்கிறது, அவைகளுக்கு நேரடியாகப் பாய்வதற்கு என்னென்ன செய்யவேண்டும் என்ற கோரிக்கைகள் பல இடங்களிலே இருக்கிறது. இன்னும் தண்ணீரானது பல வாய்க்கால்களிலே நல்ல முறையில் பாய்ச்சப்படாமல், தண்ணீர் ஒழுங்காக சப்ளை செய்ய முடியாததினால் வருஷா வருஷம் நிலங்கள் எல்லாம் தரிசாகப் போகின்றது என்று தந்திகள் மூலம் அமைச்சர்கள் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வரக்கூடிய நிலைமையைப் பார்க்கின்றோம். இப்படித் தந்தி கொடுப்பவர்கள் ஏதோ நிலத்தை தரிசு போட வேண்டுமென்று போடவில்லை. அவர்கள் அப்படி நிலத்தைத் தரிசாகவே போட மாட்டார்கள். அப்படிப் போடுவதால், அவர்களுக்கு நஷ்டம்தான் ஏற்படும். ஆகவே தண்ணீர் வசதி இல்லாமையால் அவன் தன்னுடைய நிலத்தைத் தரிசாகப் போடுவானே தவிர, சும்மா தரிசாக நிலத்தைப் போடுவதற்கு வழியே கிடையாது.

28th March 1961] [Sri A. R. Marimuthu]

இன்னும் எங்கள் பகுதியை எடுத்துக்கொண்டால், ஒவ்வொரு நிலத்திற்கும் வாய்க்கால் வசதிகூட கிடையாது. அப்படி வாய்க்கால் வசதி இருக்கக் கூடிய இடத்தில், பக்கத்து நிலக்காரருக்கு வாய்க்காலை வெட்டி விட மாட்டேன் என்று சொல்லி அடைத்துக் கொண்டால், அதைப்பற்றி கேஸ் போடுவதானால் 3 வருஷம், 4 வருஷமாகி விடுகிறது. இதுபோல் பல இடங்களில் இருக்கிறது என்பதை கனம் அமைச்சர் அவர்களுக்கு நான் நிரூபிக்க முடியும். இப்படி இருப்பதால் நிலங்கள் பல இடங்களில் தரிசாகவே இருக்கிறது. ஆகவே தண்ணீர் பாய்ச்சினாலும், பாய்ச்சா விட்டாலும் நிலத்திற்கு வரி என்று இருக்குமானால், அதனால் பல சங்கடங்கள். அளிக்கக் கூடியதாய் இருக்கும். அப்போது விவசாயிகள் எக்கர் ஒன்றுக்கு 20-க்கு மேல் வரியாகக் கட்ட வேண்டுமென்று இருக்குமென்பதை கனம் அமைச்சர் அவர்களுக்கு இந்த சமயத்திலே ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல. இப்போது எல்லாப் பகுதிகளிலும் புஞ்சை கிளாசிபிகேஷன் வைத்துவிட்டு, அதற்குமேல் நில வரி, தண்ணீர் வரி என்று போட்டால், அது நஞ்சைக்குப் போடப்படும் வரியைக் காட்டிலும் அதிகமாகி விடும். ஆகையால் அவைகளைக்கூட நஞ்சை என்று கிளாசிபிகேஷன் செய்துவிட்டால், வரிகூட குறையும். ஆகவே நிலத்திற்குத் தகுந்தவாறு ரி-செட்டில்மெண்டின்போது கிளாசிபிகேஷன் செய்தால் நல்லது. அப்போது அது விவசாயிக்கும் ஒரு நன்மையாக முடியும். அப்படி இல்லாமல், தண்ணீர் எடுத்துக் கொள்வாயோ இல்லையோ நீ வரி கொடுக்க வேண்டும் என்ற ஒரு நிர்ப்பந்தம் ஏற்படுத்துவது அவ்வளவு சரியல்ல. ஆகவே இப்போதுள்ளபடியே வைத்துக்கொண்டு, இந்தச் சட்டத்தைப் புகுத்தினால் அது பெரும்பாலான விவசாயிகளுக்கு பெரும் நஷ்டத்தைத்தான் உண்டாக்கும். அதோடு அதனால் தேசத்தில் எந்தவிதமான நலன்களும் ஏற்படப் போவதில்லை. சில இடங்களில் வாய்க்கால் வசதி இருந்தும், கடைசிப் பகுதிக்குத் தண்ணீர் வரவில்லை என்று சொல்லப்படுகிற குறை இருந்து வருகிறது. அப்படிப்பட்டவைகளையும் கவனிக்க வேண்டும். தண்ணீர் வராத இடங்களுக்குத் தீர்வை இருக்கக்கூடாது. ஆகவே இந்தக் குறைகளையெல்லாம் போக்க வேண்டுமென்று சொன்னால், முதலில் சாகுபடிக்கு கொண்டு வரக்கூடிய நிலங்களுக்கு ஒரு நிரந்தரமான வசதியைச் செய்ய வேண்டும். அப்படி ஏற்படுத்திய பிறகு, நிலங்களை தரிசு போடக்கூடாது என்று செய்ய வேண்டும். அப்படி தரிசு போட்டாலும் அதற்கு வரி உண்டு என்று ஏற்படுத்தினால், அப்போது அவசியம் சாகுபடிக்கு கொண்டு வருவதற்கான ஒரு நிலைமையை ஏற்படுத்த முடியும். ஆகவே தண்ணீர் பாய்ந்தாலும், பாயாவிட்டாலும் வரி கொடுக்க வேண்டுமென்ற இந்தச் சட்டத்தை தயவு செய்து சிந்தித்து ஒரு முடிவு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

DEPUTY SPEAKER : The hon. Member, Sri Karuthiruman, has given notice of an amendment and he can move it now.

SRI P. G. KARUTHIRUMAN : Mr. Deputy Speaker, Sir, I move—

'That the Madras Irrigation Cess (Amendment) Bill, 1961 (L.A. Bill No. 17 of 1961), be referred to a Select Committee.'

The names of hon. Members will be furnished later.

SRI S. NAGARAJA MONIGAR : Sir, I second the amendment.

DEPUTY SPEAKER : Now the amendment is also before the House for discussion.

Sri P. G. KARUTHIRUMAN: கனம் உதவி சபாநாயகர் அவர்களே இப்போது கொண்டுவந்திருக்கும்படியான சென்னை இர்ரிகேஷன் செஸ் திருத்த மசோதாவை பொறுக்குக் கமிட்டிக்கு விடவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, அதற்கு முன்னால் சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படு கிறேன். முதலிலே கீழ்பவானித் திட்டம் ஏற்பட்ட சமயத்திலே லோயர் பவானி செஸ் ஆக்ட் என்று ஒன்றிருந்தது. மேட்டூர் வாய்க்கால் கொண்டு வந்த சமயத்திலே, தனிச் சட்டம் இருந்தது. ஆனால் இப்போது பலவிதமான அபிவிருத்தித் திட்டங்கள் ஏற்பட்ட காரணங்களினாலே, இன்னும் பலவிதமான குளம், குட்டைகளை எடுத்துக் கொண்டு பூமிகளை யெல்லாம் அபிவிருத்தி செய்ய வேண்டுமென்ற நிலைமை ஏற்பட்டதினாலே, ஒவ்வொன்றிற்கும் ஒன்றன்பின் ஒன்றாகத் தனித்தனியாக சட்டம்கொண்டு வரவேண்டுமென்று ஏற்படுவதாலே, அந்த நிலைமையைத் தவிர்ப்பதற்காக, இப்படி மொத்தமாக ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தால் நல்லதென்று கருதித்தான் இர்ரிகேஷன் வசதி பெரும்படியான சர்க்கார் ஏற்பாடுகள் செய்துள்ள இடங்களுக்கெல்லாம் மொத்தமாக ஒரு சட்டம் கொண்டு வந்திருக்கிறார்களென்று நான் நினைக்கிறேன். இந்தச் சமயத்தில் நான் ஒன்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இப்போது இருக்கும்படியான இந்தச் சட்டத்தில் பலவிதமான தவறுகள் இல்லையென்று சொன்னாலும்கூட, இது எப்பொழுதோ போட்ட ஒரு சட்டமாகையால், இதை இந்தக் காலத்திற்கு ஏற்ற வகையில் மாற்றிக்கொள்வதுதான் நல்லது என்று நான் நினைக்கிறேன். முன்னால் இருந்த சந்தர்ப்பங்களில் முதலீட்டுச் செலவு குறைந்து, அதிகமான வரியைச் செலுத்திக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதைப் பார்க்கும்போது, இப்போது இருக்கும்படியான வரி அதிகமென்று சொல்லுவதற்கே இல்லை. பரவலாக இருக்கிறது. முன்னால் ஒரு மூட்டை நெல் 5 ரூபாய்க்கு விற்றது. அப்போது எக்கருக்கு 12 ரூபாய் வரி என்று வரி கொடுத்திருக்கிறார்கள். ஆனால் இப்போது ஒரு மூட்டை நெல் 25 ரூபாய்க்கு விற்கிறது. ஆனால் இப்போதும் எக்கருக்கு 15 அல்லது 20 என்று தான் கட்டுகிறார்கள். இதை அதிகமென்று ஒருக்காலும் சொல்ல முடியாது. அந்தக் காலத்திலே இப்படியெல்லாம் கொடுத்து ரொம்பவும் விவசாயத்திலே நஷ்டமடைந்திருக்கிறார்கள். ஆகவே விவசாயி பெரும் நஷ்டத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள் என்பதை தெரிவித்துக் கொள்ளுவது மிக மிக அவசியமென்று நான் நினைக்கிறேன். ஆகவே இனிமேல் கொண்டு வரும் சட்டத்தைகூட ஒரே மாதிரியான முறையிலே மாற்றியமைப்பது நல்லதென்று எண்ணுகிறேன். அப்படி மாற்றியமைக்கும்போது நான் சில யோசனைகளைக்கூற விரும்புகிறேன். அதாவது சாகுபடிக்கு கொண்டு வரக்கூடிய நிலங்களுக்கெல்லாம் ராயல்டியாக இவ்வளவு வரி கொடுக்க வேண்டுமென்று நிர்ணயிக்க வேண்டும். அதை ஒரு அடிப்படையாக வைத்துக் கொண்டு, ஒரு ரூபாய் அல்லது இரண்டு ரூபாய் என்று திட்டமாக வைத்துக்கொண்டு, அதற்கு மேல் காட்டு வெள்ளாமை, குளப் பாசனம், கிணற்றுப் பாசனம், வாய்க்கால் பாசனம் என்று வைத்துக் கொண்டு அந்த அடிப்படையிலே நிர்ணயிப்பது நல்லதென்று நினைக்கிறேன். ஆகவே இதற்கெல்லாம் ஒரே கிளாசிபிகேஷன் இருக்கவேண்டும். இரண்டு அணா, நான்கு அணா, எட்டு அணா என்று இப்போதிருக்கும் பூமிகளுக்குத் தீர்வை போடப்பட்டிருக்கிறது. இந்தப் பூமி தீர்வை என்பது ஒரே அடிப்படையைக் கொண்டதாக இருக்க

1 p.m.

வேண்டும். எல்லாவற்றையும் ஒரு ரூபாய் அல்லது இரண்டு ரூபாய் என்று வைத்து, அந்த அடிப்படையிலிருந்து விவசாயிக்கு சர்க்காரிலிருந்து பெறக்கூடிய நன்மைக்குத் தகுந்தவாறு தீர்வையை உயர்த்திக் கொண்டே போனால் மிகவும் நன்மையாக இருக்கும். இந்தச் சமயத்தில் ஒரு சம்பவத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். ஒருவன் தன் கடைசி காலத்தில் தன் மகனைக் கூப்பிட்டு, தன்னுடைய ஆசைகளைச் சொன்னான், மகன் எல்லாவற்றையும் குறித்துக் கொண்டான்; "எனக்கு அங்கே 5,000 ரூபாய் வரவேண்டும்" என்று சொன்னான், மகன் குறித்துக் கொண்டான்; "இந்த ப்ரோ நோட்டில் வரவு வர வேண்டும்" என்றான், அதையும் குறித்துக் கொண்டான். கடைசியாக நான் கடன் இவ்வளவு திருப்பிக் கொடுக்க வேண்டும் என்றான்; மகன் உடனே இவருக்கு சாகும் சமயத்தில் புத்தி கெட்டு விட்டது என்றான்; வேறு விதமாகச் சொல்லுகிறார்கள்

28th March 1961] [Sri P. G. Karuthiruman]

என்றான். அப்படிப் புத்தி கெட்டுவிட்டது என்று சொன்ன மகனைப் போல் இல்லாமல், நம் கடமையை உணர்ந்து, நாம் அனுபவிப்பதற்குத் தக்க வரி செலுத்த வேண்டும் என்ற மனப்பான்மையை வளர்க்க வேண்டும். வரி கொடுக்க வேண்டாம், வேண்டாம் என்ற மனப்பான்மை இருக்கக்கூடாது. பொருத்தமான வரியைச் செலுத்தினால்தான், உரிமை வரும். வரியை நியாயமான முறையில், மக்களைப் பாதிக்காத முறையில் போட வேண்டும், அம்மாதிரிச் செய்ய வேண்டும் என்று பொறுக்குக் கமிட்டிக்கு இதை அனுப்ப வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். மாகாணம் பூராவுக்கும் அடிப்படையாக ஒரு வரியை ஏற்படுத்திக் கொண்டு, அதன் பிறகு, பூமிக்குத் தக்கவாறு, அது அடையும் நன்மைக்குத் தக்கவாறு, அதற்குக் கொடுக்கும் வசதிகளுக்குத் தக்கவாறு வரி விதிப்பு இருக்க வேண்டும் என்று தெரிவிக்கிறேன்.

SRI S. M. ANNAMALAI : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, ஆளும் கட்சியைச் சேர்ந்த விப்பைத்தவிர அத்தனை பேரும் கூட ஆதரிக்கிற மாதிரி, இந்த மசோதா தேவையில்லை என்ற முறையிலே எதிர்த்தார்கள். இந்த மசோதாவைப் பார்க்கும் போது, இதிலே பலகோடி ரூபாய்கள் வருமானம் வரும் என்று தோன்றுகிறது. மசோதா சிறிய மசோதா தான் ; அது லோகல் ஸெஸ் ஆகப் போட்டால் அதில் பல லட்சக் கணக்கான ரூபாய்கள் வருமானம் வரும். இதிலே, "Water is made available" என்றிருக்கிறது ; "Made available" என்று சொல்லுவது எவ்விதம் பொருந்தும் என்றுதான் புரியவில்லை. தண்ணீரைத் தேக்கிப் பாய்ச்சவேண்டுமானால், "field bothies" போன்றவைகளை போட்டுக்கொடுக்காததால், மக்கள் அந்த தண்ணீரை உபயோகிப்பதில் கஷ்டம் இருக்கிறது ; ரிக்ளமேஷன் செய்யாமலும், தண்ணீர் பாயும் வசதிகளும் இல்லை. அவர்கள் தாங்களாகவே செய்து கொள்ள வசதியற்றவர்களாக இருக்கிறார்கள். எல்லோருக்கும் சேர்த்து 'Made available' வார்த்தையைப்போட்டு இருக்கிறார்கள். அது பயங்கரமான வார்த்தை. மேலும் தண்ணீர் பாய்ச்சினாலும், பாய்ச்சாவிட்டாலும், தீர்வை உண்டு. நிலங்கள் 2 எக்கர், 3 எக்கர் என்று இருந்து, வசதியும் இல்லாவிட்டால், அவர்கள் தண்ணீரை உபயோகிக்க முடியாத நிலையில் இருப்பார்கள். அந்த நிலங்கள் ஆயக்கட்டில் சேர்ந்திருந்தால் அவர்களும் தீர்வை கட்டித்தான் ஆகவேண்டும். ஆகவே தான் இந்த மசோதா செலக்ட் கமிட்டிக்குச் செல்லுகிறது. அப்படியே அதைச் சட்ட மன்றத்திற்கு வராமல் அந்த இடத்திலேயே கைவிட்டு விடவேண்டும் என்று கோரி முடிக்கிறேன்.

SRI S. NAGARAJA MONIGAR: ஸார், இந்த தண்ணீர் தீர்வை மசோதாவைப் பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்ப வேண்டுமென்று விப் அவர்கள் கொண்டு வந்திருக்கும் திருத்தத்தை ஆதரிக்கிறேன். இதிலே, நீர்ப் பாசனங்கள் பல காலமாக இருந்து, தண்ணீர் தவறாமல் விவசாயிகளுக்கு கிடைக்கிறது என்றால் கொஞ்சம் பொருந்தும். அநேக நீர்ப் பாசனங்கள் புதிதாக ஏற்பட்டிருக்கின்றன. அதிலெல்லாம் ஜில்லாவுக்கு ஜில்லா நிலைமை மாறுபட்டு இருக்கிறது. மழையே இல்லாத பிராந்தியங்களுக்கு, சர்க்கார் 10 அல்லது 20 வருஷங்களுக்கு வெற்றிகரமாக ஜலம் கிடைக்கும் என்ற முறையிலே திட்டமிட்டிருக்கிறார்கள். அப்படி ஜலம் கொடுக்கும் போது, விவசாயத்திற்கு வேண்டிய காலத்தில் அணைக்கட்டுகள், நீர்த்தேக்கங்கள் நிரம்பி, ஜலம் கொடுக்க வேண்டும். அப்படி யில்லாமல் காலந் தாழ்த்திக் கொடுப்பதால் பிரயோஜனம் இல்லை. கால்வாய் பாசனம் உள்ள இடங்களில் எதிர்பாராமல் மழை ஏற்பட்டால், அதைக் கொண்டு புஞ்சை தானியங்கள் விளைவிப்பார்கள். அப்படிப்பட்ட இடங்களில் மேலும் ஜலம் விடும்போது, அவர்கள் புஞ்சை தானியத்தை அழித்து விட்டு நஞ்சை விளைவிக்கப் போவதில்லை. சர்க்கார் கொள்கை, புதிதாக நல்ல வசதிகள் கொடுக்கும் போது, அந்தப் பிராந்தியத்திலுள்ள மக்கள் எந்தவிதமான தண்ணீர் தகராறும் இல்லாமல், நிலங்களுக்கு நல்ல முறையில் தண்ணீரைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது.

அநேக இடங்களில் தனிப்பட்டவர்கள் தன் சொந்த சொத்தில் விட்டுக் கொடுப்பதில்லை. ஏதோ எல்லோரும் சேர்ந்து ஒரு கட்டடம் கட்டுவது, ரோடு போடுவது போன்ற காரியங்களில், வீட்டுக்கு ஒருவர் என்று வந்து வேலை செய்தாலும், தன் சொந்த சொத்து என்று வரும்போது யாரும் விட்டுக் கொடுக்க முன்வருவதில்லை. இம்மாதிரி மனப்பான்மையினாலேயே பல இடங்களிலும் விவகாரங்கள் வந்து, கொலை, வெட்டு குத்து என்று ஏற்படுகிறது. இதெல்லாம் நல்ல முறையில் நடக்க சர்க்கார் ஆவன செய்ய வேண்டும்.

சில இடங்களிலே, மதகுகளை உயர்த்திக் கட்டி விடுகிறார்கள். அப்படி உயரமாக இருப்பதால் மக்கள் பம்பு செட்டுகள் போட்டுத்தான் தண்ணீர் இறைக்க வேண்டியிருக்கிறது. அம்மாதிரி இடங்களில் இன்றைக்கு எஞ்ஜினியர்கள் மாறுதல் அவசியம் என்று கருதுகிறார்கள். நல்ல, நிறைந்த தண்ணீர் வேண்டுவது அவசியம். நம் நாடு விவசாய நாடு. நாம் அறிவோம் கங்கைத் தண்ணீரைக் கொண்டு வர எவ்வளவு பாடுபட்டார்கள் என்று ஐதிகத்தில் சொல்லி இருப்பதை. சில இடங்களிலே ஆற்றிலிருந்து 2 பர்லாங், 3 பர்லாங் வரை டிஸ்ட்ரிப்யூடரிஸ் இருக்கும் இடத்தில் கிணறு வெட்டக் கூடாது, ஆழப்படுத்தக் கூடாது என்று சொல்லுகிறார்கள். பம்பு செட்டுகள் வைக்கக்கூடாது என்று சொல்லுகிறார்கள். அது கொள்கையாக இருக்கலாம். ஆனால் அது விவசாயிகளைப் பாதிக்கிறது. தீர்வை கொடுக்க வேண்டும் என்று சொல்லும் போது காலாகாலத்தில் தண்ணீர் கொடுக்கிறோம் என்று சர்க்கார் அஷ்யூர் பண்ண முடியுமா என்று தெரியவில்லை. இன்றைக்கு கிருஷ்ணகிரி தேக்கத்தில் வருஷத்தில் 7 மாதம் தண்ணீர் கொடுக்கிறோம். பாக்கி 5 மாதம் நிச்சயமில்லை, நிர்ணயமில்லை. இப்படி யெல்லாம் சிக்கலான பிரச்னை இருக்கின்றன. கிருஷ்ண சாகர் நீர்த் தேக்கத்தை வைத்துத்தான் பேசினேன். இன்றைக்கு இதை பொறுக்குக் கமிட்டிக்குப் போவதை ஆதரித்து என் வார்த்தைகளை முடித்து கொள்கிறேன்.

Sri A. GOVINDASAMY : சட்டமன்ற உதவித் தலைவர் அவர்களே, இந்த மசோதாவிலே நீர்ப்பாசன வசதியைப் பயன்படுத்திக் கொண்டாலும் இல்லாவிட்டாலும் வரி என்ற நிலைமை இருக்கிறதே அது கூர்ந்து கவனிக்க வேண்டிய விஷயம் என்பதைப்பற்றி பரவலாக எல்லா அங்கத்தினர்களும், குறிப்பாக ஆளும் கட்சி அங்கத்தினர்களும் வன்மையாகக் கண்டித்துப் பேசினார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். அப்படி எல்லோரும் பேசியதன் காரணமாகத்தான் சர்க்கார் கட்சிக் கொரடா அவர்கள் இந்த மசோதாவைப் பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பவேண்டுமென்ற ஒரு திருத்தத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். ஆனால் அவர் கூறின கதையை நான் ஏற்றுக் கொள்ளத் தயாராய் இல்லை. அவர் கனம் ஆக மாறின பிறகு சொல்ல வேண்டியவைகளை கனம் ஆவதற்கு முன்னாலேயே பின் சீட்டில் இருந்து சொன்னது கொஞ்சம் வருத்தமாக இருந்தது. முன் வரிசையில் உட்கார்ந்து சொல்லியிருந்தால் ஒருவிதம்.

சாத்தனூர் அணைக்கட்டு, திருக்கோவிலூர் அணைக்கட்டு இங்கெல்லாம் விவசாயிகள் தண்ணீரை எடுத்துக்கொண்டாலும் கொள்ளாவிட்டாலும் வரி என்று போடுவதற்கு முன்னால் எல்லா விவசாயிகளுக்கும் அவர்களுடைய ஆயக்கட்டுகளுக்கு பாசன வசதி அளிக்க நாம் என்ன உறுதி செய்திருக்கிறோம் என்பதைக் கவனிக்க வேண்டும். ஸ்ரீ நாகராஜ மணிகார் தொகுதிக்குப் போய்ப் பார்த்திருக்கிறேன். டெய்ல்எண்டு பகுதியில் தண்ணீர் பாய்வதே கிடையாது. அப்படி தண்ணீர் வசதி செய்து கொடுக்க முடியாத நிலைமையில் அவர்கள் கிணற்றுப் பாசனத்தை நம்பி பயிர் செய்து அது சாவியாகப் போனால் வரி வஜா செய்ய வேண்டியது இருக்க, சாவியாகப் போனவற்றுக்குக் கூட கர்ணங்கள் விளைந்தது எனத் தவறான கணக்குக் கொடுக்க அவர்கள் வரி கட்டுகிறபோது தண்ணீர்த் தீர்வை என்பதும் சரியல்ல. அதையெல்லாம் வைத்துத்தான் அவர் பேசினார். வடாற்காடு மாவட்டத்தில் 19 ஆயிரம் ஏக்கரா, தென்னாற்காடு மாவட்டத்தில் 4 ஆயிரம்

28th March 1961] (Sri A. Govindasamy)

எக்கரா ஆக 23 ஆயிரம் எக்கராவுக்கு இப்போது பாசன வசதி ஏற்பட்டிருக்கிறது. பாசன வசதி இல்லாத இடங்களுக்கு வரி விலக்கு அளிக்கப்படுகிறது. எலிச்சத்திரம் அணைகட்டு, திருக்கோவிலூர் அணைக்கட்டு இங்கெல்லாம் இந்தச் சட்டம் வந்தால் பெரிதும் பாதிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தண்ணீர் வந்தாலும் வராவிட்டாலும் அவர்கள் வரி கொடுக்க வேண்டும் என்பது அர்த்தமில்லை. நம் நாட்டில் தான் ஒரு சொட்டுத் தண்ணீரைக் கூட வீணுக்காமல் விவசாயிகள் சாகுபடிக்குப் பயன்படுத்திக் கொள்கிருர்கள். ஆகவே நாம் தண்ணீர் விடுகிறேம், அதை அவர்கள் உபயோகப்படுத்திக் கொள்ளாவிட்டால் என்ன ? வரி கட்டத்தான் வேண்டும் என்று சொல்வதற்கே இடம் இல்லை. இவை பற்றியெல்லாம் நன்ருகப் பரிசீலனை செய்தாக வேண்டும். ஆகவே, இந்த மசோதா பொறுக்குக் கமிட்டிக்குப் போவதைப்பற்றி வரவேற்கிறேன். இந்தக் கமிட்டி ஒவ்வொரு பிராஜெக்ட் ஏரியாவுக்கும் நேரிடையாகச் சுற்றுப் பிரயாணம் செய்து அங்குள்ள விவசாயிகளுடைய குறைபாட்டைத் தெரிந்து கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். தண்ணீர் வசதி செய்து கொடுக்காமல் வரி கட்ட வேண்டுமென்று சொல்வது கொஞ்சம் கூடப் பொருத்த மில்லாதது என்று சொல்லிக் கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

SRI P. G. KARUTHIRUMAN : On a point of personal explanation நான் கதை பண்ணவில்லை. நான் சொன்னது அங்கத்தினருக்கு புரியவில்லை என்ருல் அது என் தவறு இல்லை. தண்ணீர் விட்டாலும் விடாவிட்டாலும் வரிபோட வேண்டும் என்று சொல்லவில்லை. தண்ணீர்-விடுகிறபோது அதை பயன்படுத்திக் கொள்ளாவிட்டாலும் வரிவிதிக்க வேண்டும் என்பதைத் தான் பொறுக்குக் கமிட்டியில் பரிசலிக்க வேண்டு-மென்று சொன்னேன்.

DEPUTY SPEAKER : It is only a point of explanation.

SRIMATHI T. N. ANANDANAYAKI : கனம் சபாநாயகர் அவர்களே இந்த மசோதா பொறுக்குக் கமிட்டிக்குப் போவதற்குக் கனம் அமைச்சர் அவர்கள் ஒத்துகொண்டதற்காக நன்றி செலுத்திகொள்கிறேன். எப்போதுமே அவர்தான் ஜனநாயகக் கருத்துக்கு மதிப்புக்கொடுத்து நடந்து கொள்வார். இப்போதும் இந்த மசோதா பொறுக்குகமிட்டிக்கு போவதற்கு அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொண்டிருப்பதானது வரவேற்கத்தக்கது.

DEPUTY SPEAKER : The hon. Member, Sri Karuthiruman, has moved the amendment, but the Hon. Minister has not yet replied.

SRIMATHI T. N. ANANDANAYAKI : Anyway it is a move from the Government (laughter).

அவர்கள் இன்னும் ஒத்துக்கொள்ளவில்லை என்ருலும்கூட அவர் சம்மதிக்க வில்லை என்ருல் இந்தத் திருத்தம் பிரேரேபிக்கப்பட்டிருக்காது அதற்காக நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன் என்று சொல்ல விரும்புகிறேன். நான் ஒரு விவசாயி என்று இல்லாவிட்டாலும் இந்த நாட்டில் பிறந்தவர்களுக்கு எல்லாம் விவசாயம் தெரியும் என்கிற காரணத்தினுல் நான் சொல்லுகிற கருத்து தவருக இருந்தாலும் அதைப் பரிசீலனை செய்து பார்க்க வேண்டும் என்பதற்காகச் சொல்லுகிறேன்.

குறிப்பாக லோயர் பவானி, மேட்டூர் கெனல் போன்ற திட்டங்கள் நிறைவேற்றப்பட்டவுடன் தனியாக இதற்குச் சட்டம் போட்டிருக்கிறேம் இப்படி ஒவ்வொரு பிராஜெக்டும் பல கோடி ரூபாய் செலவு செய்து கொண்டுவந்தவுடன் தனித் தனியாக சட்டம் கொண்டுவருவது சரியல்ல, நல்லது அல்ல என்று யோசித்துத்தான் இப்போது பொதுவாக இந்தச் சட்டம் கொண்டுவரப்படுகிறது.

(At this stage the Deputy Speaker sounded the gong.)

SRIMATHI T. N. ANANDANAYAKI : I want two minutes more. As it is a Bill, we should discuss it in detail.

[Srimathi T. N. Anandanayaki] [28th March 1961

இந்தச் சட்டம் கொண்டுவருவது நல்லது என்றாலும் இதை ஆர அமரக் கொண்டுவர வேண்டும். வரி வாங்குவது தவறு அல்ல என்றாலும் அந்த வரி நியாயமான முறையில் விதிக்கப்பட வேண்டும். வரியே வேண்டாம் என்கிற முறையில் பேசுவது சரியல்ல. பல லட்சம் ரூபாய்களைத் திட்டத்திற்காகச் செலவிடுகிறோம். அதோடு லாண்டு ரெவின்யூ வருவாயைப் பார்த்தால் இன்னும் இந்த 6 கோடி அளவிலேயே இருந்துகொண்டிருக்கிறது. இதற்குக் காரணம் எங்கே தவறு என்று பரிசீலனை செய்தாக வேண்டும். இவற்றை எல்லாம் சிந்தித்துப் பார்ப்பதற்கு இந்த மசோதாவைப் பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்புவது நல்ல வாய்ப்பாக இருக்கும் என்று நினைக்கிறேன். இதை இப்போதே பரிசீலனை செய்து பார்க்கா விட்டால், எப்படி லோயர் பவானி ஏரியாவில் கிளர்ச்சி மேல் கிளர்ச்சி ஏற்படுவதும், விவசாயிகள் எந்தக் கட்சியின் பின்னால் ஓடுவது நலம் என்று ஓடுவதும்—இதுவே பெரும் தொல்லையாகப் போய்விடும். இன்றையதினம் நாம் விவசாயிகளுக்குப் போதுமான தண்ணீர் சப்ளை செய்யாமல் இருக்கிறோமா, அல்லது தண்ணீர், தண்ணீ என்று கதறிய விவசாயி இன்றையதினம் நாம் தண்ணீர் சப்ளை செய்கிறபோதும் அதை எடுத்துக்கொள்ள மறுக்கிறானா என்பதை எல்லாம் நன்றாக விசாரிக்க முடியும்.

பல இடங்களில் தண்ணீர் வாய்க்காலின் கடைசி வரையிலும் சென்று பாய்வதில்லை. அதுவும் முன்பெல்லாம் வாய்க்கால் வெட்டுக்காரர் குடும்பம் என்றே உண்டு. சர்க்கார் ஏ க்ளாஸ் வாய்க்கால்களை வெட்டுகிறார்களே தவிர, பி க்ளாஸ், ஸி க்ளாஸ் வாய்க்கால்களை எல்லாம் வெட்டித் தருவது இந்த வாய்க்கால் வெட்டுக்காரர் குடும்பம்தான். வீட்டுக்கு இத்தனை என்று பணம் வசூல் செய்து மொத்தமாக இவர்கள் வெட்டிக் கொடுப்பார்கள். ஆனால் இப்போது ஊரிலே ஒற்றுமை இல்லை. தடி எடுத்தவுடன் ஊர்ப் பணத்தை எல்லாம் சாப்பிட்டுவிடுகிறான். இப்படிப் பல வாய்க்கால்களை வெட்டப்படாமல், தண்ணீர் பாய வசதி இல்லாமல் இருக்கிறபோது நாம் வரி வாங்குவது சரியல்ல. தீர ஆலோசித்து இதை நல்ல முறையில் கொண்டுவர வேண்டுமென்பது என் அவா. என்னைப் பொறுக்குக் கமிட்டியில் போடுவார்களோ என்னவோ தெரியாது, ஆகவே, இப்பொழுதே சொல்லிவிடலாம் என்று சொன்னேன். அதற்காக நேரத்தை அதிகமாக எடுத்துக்கொண்டதற்கு மன்னிக்க வேண்டும்.

* THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த மசோதாவைப் பற்றி ஒரு தப்பு அபிப்பிராயம், (mis-understanding) இருக்கிறது. இது பொறுக்குக் கமிட்டிக்குப் போவதால் நான் விரிவாக பதில் சொல்ல வேண்டியதில்லை. முக்கியமான தாத்பரியத்தை மட்டும் சொல்லுகிறேன். இது புதிதாக வரி போடுவதல்ல. புதிய நீர்ப்பாசன வசதி செய்து கொடுக்கப்படுகிற ஆயக்கட்டுகளுக்கு தீர்வை போடவேண்டுமென்பது தான். இது வெட் ஆயக்கட்டுகளுக்குத்தான் அமுலாகும். செலவு செய்து வேண்டிய தண்ணீர் கொடுக்கப்படுகிறது. அதை உடனடியாக விவசாயிகள் உபயோகிக்க வேண்டும். லட்சம், கோடிக் கணக்கில் செலவு செய்துவிட்டு, தண்ணீர் தேக்கித் தண்ணீர் கொடுக்கும்போது விவசாயிகள் அதைப் பயன்படுத்திக்கொள்ளவில்லை என்றால், நாம் செலவு செய்த பணம் வீணாகப்போய்விடும். அதற்குப் பிரயோஜனம் இல்லாது போய்விடும். லோயர் பவானி, மேட்டூர் கெனல் ஆகிய திட்டங்களில் ஏற்கனவே விதி இருக்கிறது. இப்பொழுது எல்லோரும் உபயோகிக்கவில்லையா, ஏன் இந்த விதியென்று கேட்கப்பட்டது. விதியிருந்தால்தான் உபயோகிக்கிறார்கள். இல்லாவிடில் உபயோகிக்க "இன்சன்டிவ்" இருக்காது. மற்ற மாகாணங்களை எடுத்துக்கொண்டால், அங்குள்ள ப்ராஜெக்டை அவர்கள் சரிவர உபயோகிக்கவில்லை. இந்தத் திட்டங்கள் கீழ் அதன் முழுப் பலனையும் நம் மாநிலத்தில்தான் அனுபவித்து வருகிறார்கள். அதை உபயோகித்து வருகிறார்கள். அதற்குக் காரணம் இந்த இரு ப்ராஜெக்டிலும் இந்த விதி ஏற்படுத்தியதால்தான். உடனடியாக அதை உபயோகித்துக் கொண்டார்கள். பணம் ஒன்றும் கட்ட வேண்டாமென்றால் சும்மா இருந்து விடுவார்கள். ஒவ்வொரு இடத்திற்கும் தண்ணீர் கொண்டுபோகும் சூழ்

28th March 1961] [Sri M. A. Manickavelu]

நிலை ஏற்பட்டதால் அதை உபயோகிக்கிருர்கள். ஒரு பிளாக்கில் 40, 50 ஏக்கர் வரை கால்வாய் கொண்டு போவது அரசாங்கத்தின் கடமை. பீல்ட் போத்தீஸ் பற்றிதகராறு வந்தது. அந்தக் கஷ்டத்தை நிவர்த்தி செய்து புது விதிகள் ஏற்படுத்தி, அதை எடுத்துவிட்டோம். ஆகவே, கஷ்டம் ஒன்றும் இல்லை. தண்ணீர் இருந்தால் உபயோகிக்காமல் இருப்பார்களா, நம் விவசாயிகள் ஒரு சொட்டுத் தண்ணீர் கூட வீணுக்க மாட்டார்களே என்ருர்கள். இது புது ப்ராஜெக்டின்கீழ் வந்துள்ள ஆயக்கட்டுக்களுக்கு. இதைப்பற்றி அப்புறம் பார்த்துக்கொள்ளலாம். இப்பொழுது ட்ரை ஆக வைத்துக்கொண்டு தண்ணீர் வேண்டாமென்று எடுக்க மாட்டார்கள். பழைய கிணறு இருக்கும், ஒரு ஜதை மாடும் இருக்கும், அது சும்மாயிருக்கும். ஆகவே, அதை வைத்து இறைத்துக்கொள்ளலாம் எதற்காகத் தீர்வைப் பணம் கொடுக்க வேண்டுமென்று எடுக்க மாட்டார்கள். தண்ணீர் தயாராக வைத்திருக்கிறோம். அப்படி எடுக்காவிட்டால், நாம் செலவு செய்து கட்டியதற்கு என்ன பிரயோஜனம். அது வீணைகப் போய்விடக்கூடாது. ஆகவேதான் உபயோகித்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி அதன் கீழ் உள்ள ஆயக்கட்டுக்களுக்குத் தீர்வை கொடுக்க வேண்டுமென்று செய்யப்பட்டிருக்கிறது. இந்த விதியில்லாவிடில் மற்ற மாகாணங்களில் எப்படி உபயோகிக்கவில்லையோ அந்த நிலைதான் ஏற்படும். மேட்டூர், லோயர் பவானி போல் இதற்கும் புதிதாகச் சட்டம் செய்து கொள்ளலாம். அப்பொழுது இந்தக் கேள்வி வராது. ஒவ்வொரு ப்ராஜெக்டுக்கும் தனித் தனி மசோதா கொண்டுவருவதை விட பழைய சட்டத்தையே, இரிகேஷன் செஸ் ஆக்ட் இருக்கிறதே அதையே திருத்திவிட்டால் எந்தெந்த புது ப்ராஜெக்ட் வந்தாலும் அவைகளை இதன்கீழே கொண்டுவந்துவிடலாம். இந்த ஆக்டை பயன்படுத்திக்கொள்வது இது ஒன்றுக்குத்தான்.

"Water cess cannot be levied on lands classified as wet and held under ryotwari assessment unless the land is actually irrigated from sources other than normal sources of irrigation or by infringement of normal practice of irrigation."

சாதாரணமாகத் தண்ணீர் கொடுக்கக் கூடிய நிலையில் இருந்தால் இந்த செஸ் போட முடியாது. நார்மல் ஸோர்ஸ் தவிர, இன்னும் வேறு ஸோர்ஸ்கள் இருக்கின்றன. ஏற்கனவே நஞ்சை என்று இருந்தாலும்கூட அவர்களுக்கு மாமூலாக கிடைக்கும் தண்ணீர் கிடைக்கிறது. புது வசதிகள் செய்யப்பட்டு ஏற்கனவே இருந்ததை விட அதிகப்படியாக தண்ணீர், கிடைக்க வழி செய்யும்போது, அதற்குத் தீர்வை போடப்படுகிறது. லோயர் பவானி, மேட்டூர் இவைகளில் ஏற்கனவே விதியிருக்கின்றன. புது ப்ராஜெக்ட்ஸ் வரும்போது தனித்தனியாகக் கொண்டுவர வேண்டியதில்லை என்று இதில் திருத்தம் செய்யப்படுகிறது. ஏதோ புதிராக இருக்கிறது அப்படி இப்படியென்றெல்லாம் சொன்னுர்கள். அவை ஒன்றும் எனக்கு விளங்கவில்லை. சந்தேகம் ஏதாவது இருந்தால் அவைகளை நிவர்த்தி செய்துகொள்ளலாம். எல்லாவற்றையும் இங்கு நிவர்த்தி செய்யமுடியாது. பொறுக்குக் கமிட்டியில் நிவர்த்தி செய்யலாம் என்ற அடிப்படையில், இதற்கு அவ்வளவு அவசரமும் இல்லை. அவசரமான மசோதாக்கள் இருக்கின்றன. அவைகளோடு சேர்த்து இதையும் அவசரமாக போட்டுவிட்டார்கள். ஆகவே, காலதாமதமானுலும் பரவாயில்லையென்று இதைப் பொறுக்குக் கமிட்டிக்கு விட சம்மதித்தேன். இதில் அங்கத்தினர்களாக இருக்கக்கூடியவர்களின் ஜாபிதாவைப் படிக்கிறேன் :—

(1) The Hon. Sri C. SUBRAMANIAM.
(2) The Hon. Sri M. A. MANICKAVELU.
(3) Sri P. G. KARUTHIRUMAN.
(4) Sri P. M. MUNUSAMI GOUNDER.
(5) Sri P. RAMACHANDRAN.
(6) Sri T. K. SUBBIAH.

(7) Sri S. PANDIARAJ.
(8) Sri A. CHINNASAMI.
(9) Sri T. SAMPATH.
(10) Sri A. S. DURAISWAMI REDDIAR.
(11) Sri M. KANDASAMI PADAYACHI
(12) Sri C. NATARAJAN.
(13) Sri N. K. PALANISAMI.
(14) Sri K. R. NALLASIVAM.
(15) Sri T. S. RAMASWAMY.
(16) Sri D. S. AUTHIMOOLAM.

DEPUTY SPEAKER: I think Government agree to the amendment given notice of by Sri P. G. Karuthiruman.

The question is—

'That the Madras Irrigation Cess (Amendment) Bill, 1961 (L.A. Bill No. 17 of 1961) be referred to a Select Committee consisting of the following members.'

(1) The Hon. Sri C. SUBRAMANIAM.
(2) The Hon. Sri M. A. MANICKAVELU
(3) Sri P. G. KARUTHIRUMAN.
(4) Sri P. M. MUNUSAMI GOUNDER.
(5) Sri P. RAMACHANDRAN.
(6) Sri T. K. SUBBIAH.
(7) Sri S. PANDIARAJ.
(8) Sri A. CHINNASAMI.
(9) Sri T. SAMPATH.
(10) Sri A. S. DURAISWAMI REDDIAR.
(11) Sri M. KANDASAMI PADAYACHI
(12) Sri C. NATARAJAN.
(13) Sri N. K. PALANISAMI.
(14) Sri K. R. NALLASIVAM.
(15) Sri T. S. RAMASWAMY.
(16) Sri D. S. AUTHIMOOLAM.

The amendment was put and carried and the Bill was referred to the Select Committee.

DEPUTY SPEAKER: Under rule 99 (1) of the Assembly Rules, I nominate the Hon. Sri M. A. Manickavelu as Chairman of the Select Committee.

The House will now adjourn and meet again at 8-30 a.m. tomorrow.

The House then adjourned.